# இரண்டு தசாப்தங்களும் — புலிகளும்

## 2

1978 ஏப்ரல் 7ந் திகதி இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையும் அவரது பொலீஸ் கோஷ்டியும் முருங்கன் காட்டுக்குள் புலிகளால் அழிக்கப்பட்ட சம்பவம் சிங்கள ஆட்சியாளருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. பஸ்தியாம்பிள்ளை கோஷ்டியை அழித்தமைக்கும், மற்றைய பொலீஸ் அதிகாரிகள், இனத்துரோகிகள் கொல்லப்பட்டமைக்கும் உரிமைகோரி, முதற் தடவையாக விடுதலைப்புலிகள் வெளியிட்ட அதிகாரபூர்வமான அறிக்கையை கொழும்புப் பத்திரிகைகள் முக்கியம் கொடுத்து பிரசுரித்தன. இதனூடாகப் புலிகள் இயக்கம தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றது. விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் வளர்ச்சிபெற்று வருவதைக் கண்டு சிங்கள அரசு திகைத்தது. தமிழீழத்தில் தலைமறைவாக வளர்ந்து வரும் விடுதலை இயக்கத்தை எப்படியாவது அழித்துவிட வேண்டும் என்ற நோக்கில் 1978 மே மாதம் விடுதலைப் புலிகள் தடைச் சட்டத்தை சிங்கள அரசு பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இந்தச்சட்டம் ஆயுதப்படைகளுக்கு அளவுக்குமீறிய அதிகாரங்களை வழங்கியது. இளைஞர்களை கண்மூடித்தனமாகக் கைதுசெய்யவும், விசாரணை இல்லாமல் நீண்டகாலம் தடுப்புக்காவலில் வைத்திருக்கவும், சித்திரவதைசெய்து கொல்லவும் இந்தக் கொடும் சட்டம் இடமளித்தது. ஒட்டுமொத்தத்தில், தமிழருக்கு எதிரான அடக்குமுறையை இந்தச்சட்டம் மேலும் வலுப்படுத்தியது.

1978ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ந்திகதி ஜெயவர்த்தனா அரசு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை அமுல்படுத்தியது. இந்த அரசியலமைப்புச் சட்டம் சர்வ அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை நிறுவியது. சிங்கள மொழிக்கும், பௌத்தத்திற்கும் விசேட அந்தஸ்தை வழங்கியது. தமிழ்மொழியை இரண்டாம்தர நிலைக்குத் தள்ளியது. சாராம்சத்தில்; சிங்கள பௌத்த பேரினவாதம் சட்டமூலம் வலுப்பெற்றதோடு ஒரு பாசிச சர்வாதிகார ஆட்சியும் அமையப் பெற்றது. சிறீலங்கா ஆட்சி அமைப்பிலிருந்து தமிழ்மக்கள் பூரணமாக அந்நியப் படுத்தப்பட்டனர்.

### அவ்ரோவிமானம் புலிகளால் தகர்ப்பு

பாராளுமன்ற ஆசனங்களைத் தொடர்ந்தும் இறுகப்பற்றியிருந்த கூட்டணியினர் இந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. ஆயினும் விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட இந்த அநீதியை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவர உறுதி பூண்டது. இந்தச் சட்டம் சிறீலங்கா தேசியப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட அதே தினத்தில் அரசுக்குச் சொந்தமான பயணிகள் விமானமான 'அவ்ரோ' விமானத்தை விடுதலைப்புலிகள் தகர்த்தனர். இரத்மலானை விமானநிலையத்தில் பயணிகள் இறங்கிய சிறிது நேரத்தில் புலிகளால் வைக்கப்பட்ட நேரக்குண்டு வெடித்து விமானம் சிதறியது. கொழும்பில் நிகழ்ந்த முதற் குண்டுவெடிப்பான இந்தச் சம்பவம் தமிழர் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தியதுடன், இனத்துவேசத் திமிர்கொண்ட சிங்கள அரசின் முகத்தில் கரி பூசுவதாகவும் அமைந்தது.

எழுபதுகளைக் கொண்ட தசாப்தத்தின் இறுதிக் காலகட்டம் இன ஒடுக்குதலின் இரத்தம்படிந்த இருண்ட அத்தியாயத்துடன் முடிவுற்றது. தீவிரமடைந்து வந்த விடுதலைப்புலிகளின் ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை ஒழித்து, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் ஜெயவர்த்தனா அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்க முடிவு செய்தது. இதன்படி 1979 யூலை 30ந் திகதி விடுதலைப்புலிகள் தடைச்சட்டத்திற்குப் பதிலாக படுமோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது. சனநாயக தர்மங்களுக்கு விரோதமானதும், அடிப்படை மனித உரிமைகளை மீறுவதுமான இந்தக் கொடுமையான சட்டத்தை சர்வதேச சமூகம் கடுமையாகக் கண்டித்தது. இந்தப் பயங்கரவாதச் சட்டத்தைப் பிறப்பித்த நேரத்தில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் அவசரகாலச்சட்டமும் பிரகடனப்படுத்தப்பட்டது.



எண்பதுகளில் தலைவர் பிரபாகரன்

பிரிகேடியர் வீரதுங்கா தலைமையில் மேலதிக இராணுவப் படைகளை யாழ்ப்பாணத்தில் குவித்த ஜெயவர்த்தனா ஆறுமாத காலத்திற்குள் அதாவது 1979 டிசம்பர் 31ந் திகதிக்குள், விடுதலைப்புலிகள் இயக்கமும் அதன் "பயங்கரவாத" நடவடிக்கைகளும் முற்றாக அழிக்கப்பட வேண்டுமென பிரிகேடியர் வீரதுங்காவுக்கு விசேட ஆணை பிறப்பித்தார்.

### யாழ். குடாவில் இராணுவப் பயங்கரவாதம்

வீரதுங்காவின் இராணுவம் யாழ்ப்பாணத்தில் வெறியாட்டம் ஆடியது. முன்னென்றுமில்லாத வகையில் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. நூற்றுக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டார்கள். மிருகத்தனமாக சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டார்கள். பலர் இராணுவ முகாம்களிலும், பொலிஸ் நிலையங்களிலும் வதைபட்டு படுகொலை செய்யப்பட்டார்கள், அவர்களது சிதைந்த உடல்கள் வீதியோரம் வீசப்பட்டன. யாழ். குடாநாட்டு மக்கள் மீது இராணுவ பயங்கரவாதம் கோரதாண்டவம் புரிந்தது.

வீரதுங்காவின் ஆறுமாத காலக் கொடுங்கோன்மை ஆட்சியின் விளைவாகப் பெரும் தொகையில் தமிழ் இளைஞர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பின்னால் அணிதிரண்டனர். பரந்துபட்ட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு மனமுவந்து ஆதரவு நல்கினர்.

### உயர் வடிவம் பெற்ற ஆயுதப் போராட்டம்

எழுபதுகளின் தசாப்தம் சிங்கள தமிழ் தேசிய முரண்பாட்டை என்றுமில்லாதவாறு முதிர்ச்சியடையச் செய்தது. அரசு ஒடுக்குமுறையின் தீவிரமான அழுத்தம் தமிழீழத்தில் அரசியல் வன்முறையை அலைமோதச் செய்தது. இந்த அரசியல் வன்முறையால் எழுந்த புறநிலைகள் ஒரு பலம் வாய்ந்த ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை, புலிகள் இயக்கத்தை பிறப்பெடுக்கச் செய்தது. அரச ஒடுக்குமுறை மேலும் மேலும் தீவிரமடைந்து செல்ல ஆயுத எதிர்ப்பு முறையும் தீவிரமடைந்து சென்றது. பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டம் வளர்ந்து விரிவடைய மிதவாதப் பாராளுமன்ற அரசியல் செயலிழந்து போனது. ஒட்டு மொத்தத்தில், இந்த தசாப்தம் தமிழரின் அரசியல் போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக உயிர்வடிவம் பெறச் செய்ததுடன், தன்னாட்சி உரிமையை நிலைநாட்டி தமிழீழத் தனியரசை நிறுவும் வரலாற்றுத் தேவையையும் வெளிப்படுத்தியது.

### எண்பதுகளின் தசாப்தம்

வரலாறு காணாத வன்முறைப் பூகம்பங்கள் இலங்கைத் தீவை உலுப்பிய காலகட்டமாக எண்பதுகளின் தசாப்தம் அமைந்தது. இந்தக் காலகட்டத்தில். மூர்க்கம் கொண்டு எழுந்த அரச ஒடுக்குமுறைக்கு, எதிராகச் சீற்றம் கொண்டு எழுந்த புலிகளின் எதிர்ப்பியக்கம் சூறாவளி வேகத்தில் உக்கிரமடைந்தது.

இந்த தசாப்தத்தில் தமிழீழம் என்றுமில்லாதவாறு இரத்தம் சிந்தியது. சிங்கள படையெடுப்புக்களும், இந்திய இராணுவ ஆக்கிரமிப்பும், உள்ளூர்க் கூலிப்படைகளின் அராஜகமுமாக தமிழீழ மண் ரணகளமாகியது.

மிகக் கொந்தளிப்பான இந்தக் காலகட்டத்தில் புயலின் மையமாக நின்று, எல்லா எதிர்ப்பியக்கத்திற்கும் ஈடுகொடுத்து, தமிழரின் வீர விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர் பிரபாகரன். ஆகவே தான், இந்தத் தசாப்தத்தின் மாமனிதனாக, வரலாற்றுக் கதாநாயகனாக பிரபாகரன் கருதப்படவேண்டியவர்.

இராணுவ, அரசியல், ராஜதந்திர பரிமாணங்களில் பல திருப்புமுனைகளை எடுத்த இந்தப் பத்தாண்டு வரலாற்றில் புலிகள் இயக்கம் பல சிக்கலான சவால்களுக்கு முகங்கொடுத்தது. இதில் இந்தியத் தலையீடு முக்கியம் பெறுகிறது. 1983 நடுப்பகுதியில் ராஜதந்திரக் குறுக்கீடாக ஆரம்பித்து 1987 அக்டோபரில் நேரடி இராணுவ ஆக்கிரமிப்பாக பூதாகாரமெடுத்து, 1990 மார்ச் வரை நீடித்த இந்திய வல்லாதிக்கத் தலையீட்டைத் தனித்து நின்று எதிர்த்து ஈற்றில் வெற்றிகொண்டமை புலிகள் இயக்கத்தின் மகத்தான வரலாற்றுச் சாதனையாகும்.

ஒரு மாபெரும் விடுதலைச் சக்தியாக வளர்ந்து, இக்காலகட்டத்தின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளையும் திருப்புமுனைகளையும் புலிகள் இயக்கமே நிர்ணயித்தது. இதனை இக்கட்டுரையில் முழுமையாக மீளாய்வு செய்வது கடினம். எனினும் சுருக்கமாகப் பார்ப்போம்.

### யாழ். நகரம் தீ வைப்பு

எண்பதுகளின் ஆரம்பம். கூட்டணியின் இனத்துரோகப் படலமாகவும், சிங்களப் பேரினவாதத்தின் இன ஒழிப்பு வன்முறையாகவும் தொடங்கியது. தமிழீழத் தனியரசு அமைப்பதற்குத் தமிழ் மக்களிடம் ஒப்புதல் பெற்று கொழும்புப் பாராளு

**இரண்டு தசாப்தங்களும் புலிகளும்**

*என்ற தலைப்பில் முத்தமிழ் விழா மலரில் (1991) திரு. அன்ரன் பாலசிங்கம் எழுதிய கட்டுரையின் தொடர்ச்சியை இங்கு மறு பிரசுரம் செய்கிறோம்.*

மன்றத்திற்குள் நுழைந்து கொண்ட கூட்டணி, மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்கும் அளவிற்குக் கீழிறங்கியது. இந்த மாவட்டசபைத் தேர்தலுக்கு முதல்நாள் இரவு, 1981மே 31ந் திகதி, யாழ்ப்பாணத்தில் சிங்கள ஆயுதப்படைகள் வெறியாட்டம் ஆடி யாழ். நகரை தீயிட்டுக் கொழுத்தியது. யாழ். நூல் நிலையமும் அதிலிருந்த வரலாற்றுக் கலாச்சாரப் பொக்கிஷங்களும் தீ வைத்து அழிக்கப்பட்டன. ஜெயவர்த்தனாவின் மூத்த அமைச்சர்களான சிறில்மத்தியூவும், காமினி திசநாயக்காவும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து இந்த நாசவேலையைச் செய்து முடித்தனர். யாழ்ப்பாணத் தீவைப்பை அடுத்து, சரியாக மூன்று மாதங்களின் பின்னர் இலங்கைத்தீவு பூராவும் தமிழருக்கெதிரான இனக்கலவரம் வெடித்தது. நூற்றுக்கணக்கில் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கோடிக்கணக்கில் தமிழர் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

## புலிகளின் தாக்குதல்கள்


அரச வன்முறை தீவிரமாக விடுதலைப் புலிகளின் ஆயுத எதிர்ப்பியக்கமும் அதிதீவிரமடைந்தது.

1981 அக்டோபர் 15ந் திகதி, சாள்ஸ் அன்ரனி (சீலன்) தலைமையில் விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணி ஒன்று யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியில் இராணுவ ஜீப் வண்டி ஒன்றைத் தாக்கி இரு இராணுவத்தினரை அழித்தனர். சிங்கள இராணுவத்திற்கு எதிராக விடுதலைப்புலிகள் நடாத்திய முதலாவது கெரில்லாத்தாக்குதல் இதுவாகும்.

1982 யூலை 2ந் திகதி நெல்லியடியில் ரோந்து சென்ற பொலிஸ் ஜீப்வண்டி மீது திடீர்த் தாக்குதலை நடாத்திய புலிகள் நான்கு பொலிசாரைக் கொன்றனர்.

1982 அக்டோபர் 27ந் திகதி விடுதலைப்புலிகளின் கெரில்லா அணி ஒன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீது வெற்றிகரமான தாக்குதலை நடாத்தியது. இந்தத் தாக்குதலில் மூன்று பொலிசார் கொல்லப்பட்டனர். மூவர் படுகாயமடைந்தனர். பொலிஸ் நிலைய ஆயுதக் களஞ்சியத்திலிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இவ்விதம் எண்பதின் ஆரம்பத்தில் முளைப்புற்ற புலிகளின் ஆயுத எதிர்ப்பியக்கம் 1983ல் மேலும் தீவிரமடைந்தது.



07. 09. 1978 இல் புலிகளால் தகர்க்கப் பட்ட அவ்ரோ விமானம்.

## மகத்தான அரசியல் வெற்றி

இது இவ்வாறிருக்க, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டமாக, அதிகாரப் பரவலாக்கத்தின் அத்திவாரமாக கூட்டணியால் சிங்கள அரசிடமிருந்து பெறப்பட்ட மாவட்டசபை அதிகார வறுமையால் செயலிழந்து செத்துப்போனது. இந்த நிலையில், 1983 மே 18ஆம் திகதி வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதென அரசு அறிவித்ததும் தேர்தல் களத்தில் குதிக்க கூட்டணியும் மற்றும் சர்தர்ப்பவாத அரசியல் கட்சிகளும் முன்வந்தன. வடக்கில் தாண்டவமாடும் அரச பயங்கரவாதத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு விடுதலைப்புலிகள் பொது மக்களைக் கேட்டுக்கொண்டனர். வடக்கில் அரசின் கைப்பொம்மைகளாகச் செயற்பட்டுவந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும், ஆதரவாளர்களும் விடுதலைப் புலிகளின் எச்சரிக்கையை மீறித் தேர்தலில் குதிக்க முற்பட்டதால் இவர்களில் மூவரை விடுதலைப்புலிகள் சுட்டுக் கொன்றனர். ஒரே நாளில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து ஐ. தே கட்சியின் சார்பில் நின்ற சகல தமிழ் வேட்பாளர்களும் தேர்தலிலிருந்து வாபஸ் பெற்றதுடன் பல தமிழர்கள் ஐ. தே கட்சியிலிருந்தும் ராஜினாமா செய்தனர். புலிகளின் தீவிர அரசியல் பிரச்சாரத்திற்குச் செவிசாய்த்த வடமாகாண மக்கள் உள்ளூராட்சித் தேர்தலை பூரணமாய்ப் பகிஷ்கரித்தனர். இந்த பகிஷ்கரிப்பு அரசியல் ரீதியில் புலிகளுக்குக்கிட்டியமகத்தான வெற்றியாக அமைந்தது. புலிகளின் வேண்டுகோளை நிராகரித்து தேர்தலில் நின்ற கூட்டணியினர் சகிக்கமுடியாத அவமானத்தை தேடிக் கொண்டனர் தேர்தலில் சந்தித்த தோல்வியுடன் கூட்டணி செல்லாக்காசாக மாறியது. இத்துடன் தமிழீழ அரசியல் அரங்கிலிருந்து கூட்டணியின் உதய சூரியன் நிரந்தரமாக அஸ்தமித்தது.

## 1983 யூலை நிகழ்வுகள்

தமிழர் வரலாற்றில் கொந்தளிப்பு மிகுந்த கால கட்டமாக 1983 யூலை மாதம் அமைந்தது. ஒரு சம்பவம், சங்கிலித் தொடர்பாக பல நிகழ்வுகளை விளைவித்துப் பாரிய அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தி, போராட்ட வரலாற்றின் ஓட்டத்தை முனைப்படுத்தும் வகையில் அமைந்ததென்றால், அது யூலை 23ந் திகதி திருநெல்வேலியில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல் சம்பவமாகும். சிங்களப் பேரினவாதத்தைப் பேரதிர்ச்சியில் ஆழ்த்திய இந்தத் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்த அதிரடித் தாக்குதலைத் திட்டமிட்டு அதில் பங்குகொண்ட பிரபாகரன் தனது கையால் ஏழு இராணுவத்தினரைச் சுட்டுக் கொன்றார். தமிழீழத்தில் கூடிய தொகையில் சிங்களப் படையினர் கொல்லப்பட்ட முதற் சம்பவம் இதுவாகும்.

“பயங்கரவாதத்தைப்” பூண்டோடு அழிக்கப்போவதாக மாறி, மாறி முழங்கிக் கொண்டிருந்த ஜெயவர்த்தனா அரசுக்கு இந்தத் தாக்குதல் சம்பவம் முகத்தில் ஓங்கி அறைந்தது போல் இருந்தது. புலிகள் இயக்கத்தின் தலைமையில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒரு திண்ணியமானவடிவத்தையும் காத்திரமான வளர்ச்சியையும் பெற்று வருகிறது என்பதை தமிழ் மக்களுக்கு இந்தத் தாக்குதல் சம்பவம் உணர்த்தியது.

இந்த சம்பவத்தின் அதிர்ச்சி அலைகள் தென்னிலங்கையில் பரவியபோது அதனைத் தமிழருக்கு எதிரான இனக்கிளர்ச்சியாக மாற்றிவிட்டு, கொழும்பில் நிலைகொண்டிருந்த தமிழரின் பொருளாதார ஆதிக்கத்தை நாசமாக்கிவிட சிங்கள அரசு திட்டமிட்டது. அரசின் தூண்டுதலின் பேரில் யூலை 26ஆந் திகதியிலிருந்து தென்னிலங்கையில் வெடித்துப் பரவிய இனப்பூகம்பம் வரலாறு காணாத இரத்தக்களரியை உண்டுபண்ணியது. சிங்களக் காடையரின் காட்டுமிராண்டித்தனமான வன்முறை முழு உலகத்தையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

## ஆறாவது சட்டத் திருத்தம்

இந்த இனத்துவேச வன்முறையானது தமிழ், சிங்கள தேசங்களை என்றுமில்லாதபடி பிளவுபடுத்தியது. தமிழ்த் தாயகத்தின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டும் தனியரசுப் போராட்டத்திற்கு என்றுமில்லாத உத்வேகம் பிறந்தது. இனவுணர்ச்சிப் பிரவாகத்தில் உந்தப்பட்டு ஆயிரமாயிரம் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் குதிக்கத் தயாரானார்கள். தனியரசுப் போராட்டம் மேலோங்குவதைக் கண்டு பயந்த சிங்கள அரசு, அவசர அவசரமாக, அரசியலமைப்பில் ஆறாவது திருத்தம் ஒன்றை அமுல்படுத்தி, தமிழரின் தன்னாட்சி உரிமைக்குத் தடைவிதித்தது. இந்தத் தடை தனியரசுப் போராட்டத்திற்கு மேலும் உரமேற்றுவதாக அமைந்தது. இந்தச் சமயத்தில், பாராளுமன்றத்திலும் இருக்கமுடியாது தமிழீழத்திற்கும் திரும்பமுடியாது தத்தளித்த கூட்டணித் தலைவர்கள் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தார்கள்.

## இந்தியத் தலையீடு

இதுவரை காலமும் இலங்கைத்தீவை அதிரவைத்த சம்பவங்களையும், அதன் வரலாற்றுப் போக்கினையும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்த இந்திய அரசு யூலைக் கலவரத்துடன் இலங்கையில் தலையிட முடிவு செய்தது. இந்திய வல்லாதிக்கத்தை வெறுத்த ஜெயவர்த்தனாவின் அமெரிக்க ஏகாதிபத்திய சார்புப் போக்கும், இலங்கையில் இந்திய பகைமைச் சக்திகளின் ஊடுருவலும் பாரத அரசுக்குச் சினத்தை மூட்டியது. அதே சமயம், ஈழத்தமிழர்கள் மத்தியில் மேலோங்கி வரும் தனியரசுப் போராட்டமும் அதனை முன்னெடுத்த புலிகளின் ஆயுத எதிர்ப்பு இயக்கமும் இந்திய உபகண்டத்தில் பிரிவினைவாத சக்திகளுக்கு ஊக்கமளிக்கலாம் எனவும் இந்தியா அஞ்சியது எனவே, இந்த அச்சுறுத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, இலங்கைத்தீவை தனது பூகோள-கேந்திர ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர இந்திய அரசு தீர்மானித்தது. இந்நோக்கை நிறைவேற்ற இரகசியத் திட்டம் ஒன்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சினால் திட்டப்பட்டது.



ஆரம்ப நாட்களில்
தலைவர் பிரபாகரனோடு
தோளோடு - தோள் நின்று போராடிய
எமது மூத்த உறுப்பினர்
செல்லக்கிளி அம்மான்
இவர் 23.07-1983 இல் திருநெல்வேலியில் நடந்த இராணுவ வாகனத் தொடர் மீதான தாக்குதலில் வீரமரணமடைந்தார்.

இந்த இரகசியத் திட்டத்தின்படி, தமிழ்ப் போராளி அமைப்புகளுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் அளித்து, ஆயுத எதிர்ப்பியக்கத்தைத் தீவிரமாக்கி, ஜெயவர்த்தனா அரசுக்கு நெருக்குதலை உண்டுபண்ணி ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் கொண்டுவர இந்தியா விரும்பியது ஜெயவர்த்தனாவின் திமிரை அடக்கி அவரை வழிக்குக் கொண்டுவருவது மட்டுமல்லாமல் தமிழீழ மக்களின் தனியரசுப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இந்தியா திட்டமிட்டது. ஏனைய அமைப்புக்களுக்கு கூடிய அளவு ஆயுதங்களும், பயிற்சியும், பண உதவியும் அளித்து விட்டால் இராணுவ சமபலத்தை மாற்றியமைத்து தனிநாட்டு இலட்சியத்தில் உறுதியுடன் நிற்கும் புலிகள் இயக்கத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரலாம் அல்லது ஒழித்து விடலாம் எனவும் இந்திய அரசு கருதியது.

இந்தத் திட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரத்தை இந்திரா காந்தி அம்மையார் இந்திய உளவுப்படையான றோவுக்கு (Raw) வழங்கினார்.

## செயற்கையானவிக்கம்

1983 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பாரிய தாக்கங்களை விளைவித்தன. வரலாற்றுப் படிமுறை வளர்ச்சியில் உருவகம் கொண்டு வந்த தமிழரின் ஆயுத எதிர்ப்பு இயக்கம் இந்திய தலையீட்டினால் திடீரென ஒரு செயற்கையான வீக்கம் அடைந்தது. செய்வதறியாது செயலிழந்து போயிருந்த பல தமிழ்க் குழுக்கள் இந்தியாவின் இரத்த மூட்டலினால் உயிர்பெற்று எழுந்து நிமிர்ந்தன. படைப்பலத்தை பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற அவாவில் கண்மூடித்தனமான ஆட்சேர்ப்புகள் நடந்தன. இதனால் பல சமூக விரோத சக்திகள் இந்தக் குழுக்களுக்குள் ஊடுருவல் செய்யமுடிந்தது. இதன் விளைவாக ஒழுக்கம், கட்டுப்பாடு சீருலைந்தது.

சிறு அளவில் இந்திய உதவியைப் புலிகள் பெற்றுக்கொண்டாலும் இந்திய அழுத்தங்களுக்கு வளைந்து கொடாமல் தனித்துவமான போக்கிலும் இலட்சிய உறுதியிலும் இறுக்கமாக இருந்தனர். ஆனால் அநேகமாக மற்றைய அமைப்புகள் எல்லாமே, இந்திய உதவியில் மெய்மறந்து இந்திய எசமானுக்கு அடிமைப்பட்டன. இந்தியாவின் கூலிப்படை என்று டெலோ இயக்கம் தன்னை பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியது.

(அடுத்த இதழில் முடிவுறும்)